ஆண்டில் எடுக்கலாம் என்று கருதப்பட்டுள்ளது. எனவே திருச்சி மாவட்டதைப் பிரித்து அமைப்பது சம்பந்தமான முடிவைக் குழு எடுக்கும்போது புதிய அரவக்குறிச்சி வட்டம் ஏற்படுத்துவது குறித்தும் கருதப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. அ. இராசேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் எந்த எந்த வட்டங்களைப் பிரிக்க அரசு ஆய்வு செய்து வருகிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் இ. மனோகரன்: வட்டங்களைப் பிரிக்கிற பிரச்சினை எதுவும் இல்லை. மாவட்டங்களைப் பிரிக்கும் பிரச்சினை அரசின் முன்னால் உள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. தி. ரா. மாசிலாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெகு நாட்களுக்கு முன்பு பெரிய வட்டங்களாக அமைந்து விட்ட வட்டங்களை நிர்வாக வசதிக்காகப் பிரிக்க வேண்டுமென்ற கோரிக்கை எங்கெங்கிருந்து வந்திருக்கின்றது? அந்தக் கோரிக்கைகள் எப்போது நிறைவேற்றப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: மாவட்டங்களைப் பிரித்து அமைத்த பிறகு அதுபற்றி யோசிக்கப்படும் என்று ஏற்கெனவே நான் தெரிவித்திருக்கிறேன். அதுபற்றி அப்போது யோசிக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்கும் இந்த அவைக்கும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(9—25 மணி)

திரு. எம். முகமது சித்திக்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

(விடை இல்லை.)

கோட்டாட்சி அலுவலகம் அமைத்தல்.

* 3148 திரு. ஜி. பழனிச்சாமி:

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா?

தஞ்சை மாவட்டம், திருத்துறைப்பூண்டியில் கோட்டாட்சி அலுவலகம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம, திருத்துறைப்பூண்டியில் கோட்டாட்சி அலுவலகம் அமைக்கும் செயற்குறிப்பு எதுவும் தற்போது அரசிடம் இல்லை.

திரு.ஜி. பழனிச்சாமி: பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு முன்பிருந்த அரசு திருத்துறைப்பூண்டியில் வருவாய்த்துறை

கோட்டாட்சி அலுவலகம் துவங்குவதாக அறிவித்திருந்தது. அதனை உடனடியாக நிறைவேற்றுகின்ற வகையில் புதிய அலுவலகம் திறப்பதற்கு அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் இ. மனோகரன்: பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற அரசு அறிவித்ததாகக் குறிப்பிடுகிறார்கள். இந்த அரசின் கவனத்திலும் அது இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஜி. பழனிச்சாமி: பேரவைத் தலைவர் அவர்களே, கோட்டாட்சி அலுவலகம் என்பது மன்னார்குடியிலிருந்து செயல் பட்டுக் கொண்டிருக்கிறது. வேதாரண்யம், முத்துப்பேட்டை, நாகப்பட்டினம் போன்ற பகுதிகளில் உள்ள மக்கள் தங்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டும் என்றால், பிரச்சினை களைத் தீர்க்க வேண்டும் என்றால் நீண்ட தூரம் செல்லவேண்டி இருக்கிறது. ஆகவே திருத்துறைப்பூண்டியில் அமைப்பதற்கு இந்த அரசு முயற்சி எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

(விடை இல்லை)

திரு. கோ. வீரையன்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்பு மிகு அமைச்சர் அவர்கள் திருத்துறைப்பூண்டி கோட்டாட்சி அலுவலகம் அமைப்பது குறித்து பரிசீலனையில் இருப்பதாகக் குறிப்பிட்டார்கள். தஞ்சை மாவட்டத்தில் 12 வட்டங்கள் இருந்தபோது 6 கோட்டங்களாகப் பிரிக்கப்பட்டு இருந்தது. இப்போது வட்டங்கள் பிரிக்கப்பட்டதற்குப் பிறகு, அதாவது 20 வட்டங்களாக மாற்றப்பட்டதற்குப் பிறகும் அது 6 கோட்டங் களாகவே நீடிப்பது என்பது மிகுந்த பிரச்சினையாக இருக்கிறது. அதைக் கவனத்தில் கொண்டு கோட்டங்களைப் பிரித்தமைக்கக் கூடிய முயற்சியில் ஈடுபடுவது பற்றி அரசு பரிசீலிக்குமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் இ. மனோகரன்: பேரவைத் தலைவர் அவர்களே, அதற்குரிய பதிலை நான் ஏற்கெனவே தெரிவித்து விட்டேன். மாவட்டங்கள் பிரிக்கப்பட்டதற்குப் பிறகு வட்டங் கள் பிரிப்பது பற்றியும், வட்டங்களை இணைப்பது பற்றியும், எந்தெந்த ஊர்களைச் சேர்ப்பது என்பது பற்றியும் அரசு பரி சீலனை செய்யும். இந்தப் பதிலில் திரு. வீரையன் அவர்கள் திருப்தி அடைந்திருப்பார்கள் என்று நான் கருதுகிறேன்.